செ.வெ.எண்:16/ஜூலை நாள் : 08.07.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

# தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் மற்றும் செயற்கை வண்ணம் சேர்க்கப்பட்ட உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சநடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (08.07.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் நகராட்சி பகுதிகளில் உள்ள கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வந்த தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் மற்றும் பல்வேறு தின்பண்டங்களை உணவு பாதுகாப்புத் துறை அலுவலர்கள் மூலம் ஆய்வு செய்யப்பட்டு பறிமுதல் செய்து வைத்திருந்ததை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விற்பனையை முற்றிலுமாக ஒழித்திடும் வகையில் தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்ட தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத்துறை அலுவலர்கள் மூலம் மாவட்டத்தில் உள்ள நகராட்சி மற்றும் வட்டார பகுதிகளில் விற்பனை செய்யப்படுகின்ற, தடைசெய்யப்பட்டுள்ள புகையிலைப் பொருட்கள், போதைபொருள் கலந்த சாக்லெட்டுகள் மற்றும் பாங்கு உருண்டை, கூல் லிப் , பள்ளி குழந்தைகளை கவரும் வகையில் மஞ்சள், பச்சை, சிவப்பு போன்ற செயற்கை வண்ணங்கள் சேர்க்கப்பட்ட திண்பண்டங்கள் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் உள்ள கடைகளில் விற்பனை செய்யப்படுவதை தடுக்கும் வகையில் பறிமுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் நகராட்சி பகுதிகளில் இன்றைய தினம் உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் மேற்கொண்ட ஆய்வின் போது ரூ.1 இலட்சம் மதிப்பிலான தடை செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்களும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் பெயரிடப்படாத இனிப்பு மற்றும் கிரீம் பிஸ்கெட் வகைகள், சாக்லேட்டுகள் போன்றவற்றை வாங்கி உண்பதை தவிர்த்திட வேண்டும். புகையிலைப் பொருட்கள் போன்ற உணவுப் பொருட்களை உட்கொள்வதால், போதைப்பழக்கத்திற்கு ஆளாகும் சூழ்நிலை உருவாகின்றது. வியாபாரிகள் தங்களது கடைகளில் இது போன்ற தடை செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் மற்றும் செயற்கை வண்ணம் சேர்க்கப்பட்ட தின்பண்டங்களை விற்பனை செய்வதை தாமாகவே முன்வந்து தவிர்த்திட வேண்டும். மேலும் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் உணவுப் பாதுகாப்பு அலுவலகம் மூலம் தொடர்ந்து இதுபோன்ற ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் ஆய்வின் போது தடைசெய்யப்பட்ட உணவுப் பொருட்கள் ஏதேனும் கண்டறியப்பட்டால், அவை அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் மூலமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

பொதுமக்கள் தங்களது பகுதிகளில் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் மற்றும் செயற்கை வண்ணம் சேர்க்கப்பட்ட உணவுப் பொருட்களை விற்பனை செய்வதாக அறிந்தால் பொதுமக்கள், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் கீழ்கண்ட முகவரியில் இயங்கி வருகிற தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, உணவு பாதுகாப்பு பிரிவு அலுவலகத்தில் தகவல் தெரிவிக்கவும்.

மாவட்ட நியமன அலுவலர் , தமிழ்நாடு உணவு பாதுகாப்பு (ம) மருந்து நிர்வாகத்துறை , உணவு பாதுகாப்பு பிரிவு , காவல் பணியிடை பயிற்சி மையம் எதிரில் , மாவட்ட ஆட்சியரக வளாகம் , இராமநாதபுரம் 623 503 , தொலைபேசி எண் : 04567 - 231 170

இந்நிகழ்வின் போது மாவட்ட உணவுப் பாதுகாப்பு துறை நியமன அலுவலர் மரு.ம.ஜெகதீஷ் சந்திரபோஸ், உணவு பாதுகாப்பு அலுவலர்கள் திரு.எம்.கருணாநிதி, திரு.ஏ.கருணன், திரு.ஏ.ஜான்பீட்டர், திரு.கே.சக்தீஸ்வரன், திரு.பி.வீரமுத்து, போதைப்பொருள் தடுப்பு பிரிவு தலைமைக் காவலர் திரு.அருள் சுந்தர் சிங் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**